1973 நவம்பர் 30]

Taxi services in Madras City

* 513 *Q.*—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether taxi services in Madras City is to be brought under a State owned Corporation; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) & (இ) இதற்கான ஓர் செயற்குறிப்பு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தினிடம் உள்ளது. என்றாலும் அது இன்னும் முதற் கட்டமான பரிசிலனையிலேயே இருந்து வருகிறது.

திரு. நா. வீராசாமி: ஏற்கனவே கூட்டுறவு முறையில் வழங்கப் பட்டிருக்கிற டாக்ஸிகளுக்கு இன்று ஏற்றப்பட்டிருக்கிற பெட்ரோல் விலை காரணமாக நாள் ஒன்றுக்கு ரூ. 10 கூட மிச்சம் இருப்பதில்லை. ஆகவே அந்தத் தொழில் பாதிக்கக்கூடிய நிலையில் இருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் எல்லா டாக்ஸிகளையும் நம்முடைய அரசாங்கமே ஒரு கார்ப்பரேஷன் அமைத்து எடுத்துக் கொண்டால் அரசால் அதை லாபகரமாக நடத்த முடியுமா என்பதை அரசு பரிசிலிக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இந்த யோசனை இந்த நெருக்கடிகள் எல்லாம் வருவதற்கு முன்னால் கொடுக்கப் பட்ட யோசனை. அந்த யோசனை ஆரம்ப கட்டத்தில் இருக்கிறது. அப்படி ஏற்று நடத்துவதன் மூலம் சீர் செய்ய முடியுமா, சீர் பெற்று வராது என்றால் அந்த யோசனையை ஏற்று நடத்துவது பலன் தருமா? ஆகவே ஆராய்ச்சிக் கட்டத்தில் இருப்பதாகக் குறிப்பிட்டேன்.

பெருமாநல்லூர் ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடம்

* 514 வினா—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் ஊராட்சி ஒன்றியம், பெருமாநல்லூரில் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குப் புதிய கட்டடம் ஒன்று கட்டும் செயற் குறிப்பு அரசு பரிசிலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

[1973 நவம்பர் 30

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) & (இ) பெருமாநல்லூரில் ஆரம்பச் சுகாதார நிலையம் கட்டுவதற்காக ரூ. 10,000 அடையாள நன்கொடைத் தொகையும் 3 ஏக்கர் நிலமும் கொடுக்கப்பட்டுள்ளன. ஐந்து ஏக்கர் நிலம் இருக்க வேண்டும் என்று விதி இருப்பதால் முழு அளவு நிலமும் கிடைத்த பின்னர் அதற்கான கட்டடம் கட்டுவதுபற்றி நடவடிக்கை மேற்கொள்ளப் படும்.

திரு. சு. துரைசாமி : அமைச்சர் அவர்கள் தெரிவித்ததுபோல், ரூ. 10,000 கட்டிவிட்டோம். மூன்று ஏக்கருக்குப் பதில் மேற்கொண்டு இரண்டு ஏக்கர் பெற்று அண்மையில் அறநிலையத்தைச் சார்ந்த நிலம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே விரைவில் அதைக் கட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அப்படி பத்தாயிரம் ரூபாய் தொகையும் ஐந்து ஏக்கர் நிலமும் கொடுத்த இடங்கள் இன்னும் 150 இடங்கள் இருக்கின்றன. ஆகவே மாவட்டந்தோறும் ஐந்து அல்லது பத்து இடங்கள் என்ற முறையில் ஆண்டுதோறும் கட்ட முடிகிறது. எவ்வளவு விரைவில் கட்டமுடியுமோ அவ்வளவு விரைவில் கட்டிமுடிக்க அரசு முயற்சிக்கும்.

Building for Government Hospital at Hosur

* 515 Q.—THIRU K. S. KOTHANDARAMIAH : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether the construction of the additional buildings for Government Hospital at Hosur is in progress;

(*b*) whether arrangements to provide X-Ray facility are being made; and

(*c*) the total number of Maternity beds that will be provided there?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) 100 எம்.ஏ. எக்ஸ்ரே படம் எடுக்கும் இயந்திரம் ஒன்று வாங்கப்பட்டு மேற்படி மருத்துவமனையில் நிறுவப்பட்டுள்ளது.

(உ) பத்து படுக்கைகளைக்கொண்ட மகப்பேறு மருத்துவ வார்ட் ஒன்று ஏற்படுத்தப்படும்.